**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 11/2024**
**(Old OS 89/2015, PDM TVM)**
**Examination of - DW-1**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுகுமார் |
| **Father Name** | : | ஆறுமுகம் |
| **Village** | : | திருவண்ணாமலை |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.09.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். என் சொந்த ஊர் இசுகழிகாட்டேரி இவ்வழக்கின் தாவா சொத்தும் இசுகழிக்காட்டேரியில் தான் உள்ளது நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை பொய்ப்பிப்பு செய்ய எனது தரப்பு ஆவணங்களாக 31.12.1971ம் ஆண்டு வட்டன் என்பவர் அவருக்காவும் அவரது மைனர் மகனுக்காவும் வீராசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் **பி.வா.சா.ஆ.1** ஆகும். வீராசாமி பெயரில் இருந்த தாவா சொத்தின் 11வது அயிட்ட சொத்தின் ஆ-பதிவேட்டின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 1410, 1411, 1417 முதல் 1420 வரை ஆண்டு பசலி வீராசாமியின் பெயரில் இருந்த தாவா சொத்திற்கான அடங்கலின் சான்றிட்ட நகல்கள்(6 வரிசை) **பி.வா.சா.ஆ.3** ஆகும். 13.05.2005ம் தேதியிட்ட 6ம் பிரதிவாதி மாரிமுத்துவான எனது அம்மாவின் பெயரில்

உள்ள கிரைய பத்திரம் **பி.வா.சா.ஆ.4** ஆகும். 12.03.2012 தேதியிட்ட ரங்கநாதன் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.5** ஆகும். 6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டாவின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.6** ஆகும். தாவா 11 இன சொத்தின் நில அளவை பதிவேட்டின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும். நான் தாவா 11 இன சொத்திற்கு செலுத்திய வரி ரசீதுகள்-4 அது **பி.வா.சா.ஆ.8** ஆகும். தாவாவினை தள்ளுபடி செய்ய கோருகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-(M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்